செ.வெ.எண்.20 நாள்.07.11.2017

**சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் காலியாக உள்ள பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கரூர் மாவட்ட மக்கள் விண்ணப்பித்து பயன்பெற மாவட்ட ஆட்சியர் அழைப்பு.**

சமூக பாதுகாப்பு துறையின் கீழ் செயல்பட்டு வரும் கரூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் காலியாக உள்ள சட்டத்துடன் இணைந்த நன்னடத்தை அலுவலர் (Legal cum Probation Officer) 01 பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய கீழ்க்கண்ட தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது.

பணியின் தன்மை - ஒப்பந்த அடிப்படை , காலிப்பணியிடம் - 1 , பதவி - சட்டத்துடன் இணைந்த நன்னடத்தை அலுவலர் (Legal cum Probation Officer) , தேவையான கல்வித்தகுதி - இளங்கலை சட்டப்படிப்பு (B.L)(10+2+3 Pattern) அல்லது LLB Regular , வயது - 40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும், முன் அனுபவம் - 1 வருடம் குழந்தைகள் நலன் , சமூக நலன் , தொழிலாளர் துறை தொடர்பான பணியில் சட்டம் தொடர்புடைய சேவை செய்திருத்தல் வேண்டும் , ஒய்வு பெற்றவர்கள் - கொள்கை உருவாக்கத்திலோ அல்லது திட்ட நடைமுறைப்படுத்தலிலோ பணி புரிந்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலராக இருந்து ஒய்வு பெற்ற நபராக இருத்தல் வேண்டும் , வயது வரம்பு - 62 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் , மாதத்திற்கு தொகுப்பூதியம் - ரூ.21,000/- ஆகும்.

விண்ணப்ப படிவத்தினை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு எண்:13, சாமி காம்ப்ளக்ஸ் , RTO அலுவலகம் எதிரில் மாவட்ட ஆட்சியரகம் (அஞ்சல்) , தாந்தோன்றிமலை -7 என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளவும் , பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை 28.11.2017 அன்று மாலை 5.00மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04324 – 257056 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ் இ.அ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**